# செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங், திருச்செங்கோடு

## பேரிடர் மேலாண்மை கருத்தரங்கம்








திருச்செங்கோடு செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங் கல்லூரியில் 06.02.17 மற்றும் 07.02.17 ஆகிய இரு தேதிகளில் பேரிடர் மேலாண்மை கருத்தரங்கம் நடைபெற்றது.

கல்லூரியின் செயலர் & தாளாளர் பேராசிரியர் A.பாலதண்டபாணி அவர்கள் தலைமையில் கல்லூரியின் முதன்மைசெயல் அலுவலர் இன்ஜினியர் A.B.மதன் , வேலைவாய்ப்பு இயக்குனர் அரவிந்த் திருநாவுக்கரசு, முதல்வர் முனைவர் R.சதீஸ்குமார், பேராசியர்கள் மற்றும் 500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர் .

இப்பயிற்சி பட்டறையில் G.ஆறுமுகம் ,பயிற்சி அதிகாரி ,தேசிய பேரிடர் மேலாண்மை அலுவலகம் ,புது டெல்லி அவர்கள் மழைவெள்ளம் ,தீ விபத்து,சாலை விபத்து,நிலநடுக்கம்,இடிமின்னல்,சுனாமி,அணுக்கதிர்வீச்சு ,சூறாவளி ,போர்,நிலச்சரிவு,

எரிமலை வெடிப்பு,புவி வெப்பமயமாதல் ,விஷக்கடி பூச்சிகள் மற்றும் நோய் பரப்பும் கிருமிகள்,ஆகிய பதினான்கு பேரிடர்களை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி பேரிடர் காலங்களில் பாதுகாப்பு முறைகள் ,எதிர் கொள்வது,மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை பற்றி விளக்கி செய்முறை பயிற்சி வழங்கினார். இப் பயிற்சியின் போது ஜாக்களின் பயிற்சியாளர் அவர்கள் உடன் இருந்தார் .

திரு ஆறுமுகம் அவர்கள் மூன்று முறை மத்திய அரசால் வழங்கப்படும் சிறந்த இளைஞர் விருது பெற்றவர் .மேலும் மக்களிடையே தலைக்கவசம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 1500 கிலோ மீட்டர் இரு சக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணிந்து பயணித்து கின்னஸ் சாதனை படைத்தவர் ஆவார்.

இந்தப் பயிற்சி மாணவர்களிடையே தன்னம்பிக்கையு ம் ,மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையை வளர்ப்பதாகவும் அமைந்தது.